# குறமகள் என்ற வள்ளிநாயகி இராமலிங்கம்

**ஆழத்து முத்துக்கள் 70**

**- ப. ஸ்ரீஸ்கந்தன் -**

கொழும்பு பல்கலைக்கழகத்தினரால் முதன் முதலாக நடாத்தப்பட்ட நாடக டிப்ளோமா பயிற்சி நெறியை மேற்கொண்ட ஒரேயொரு தமிழ்ப்பெண் வள்ளிநாயகி இராமலிங்கம் அவர்கள். குறமகள் என்ற புனைபெயர் கொண்ட இவர் நாடகத்துறையில் மட்டுமல்லாது சிறந்த பேச்சாளராகவும், சிறுகதை, கவிதை போன்ற புனைவு இலக்கியத்தில் புகழ் பெற்றவராகவும் விளங்கினார். முற்போக்கு சிந்தனைகள் கொண்ட ஒரு பெண்ணியவாதியாக இவர் ஆற்றிய செயற்பாடுகள் போற்றுதலுக்குரியது.

யாழ்ப்பாணம் காங்கேசந்துறையில் பிறந்த வள்ளிநாயகி அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை நடேஸ்வராக் கல்லூரி, இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம் ஆகியவற்றில் பயின்றார். கன்னியர் மடத்தில் கற்கும் நாட்களில் 'மரிய கொறட்டி' போன்ற பல கிறிஸ்தவ நாடகங்களில் இவர் பங்கேற்றார்.

சிறுவயதிலேயே காங்கேசந்துறை வசந்தகான சபையினர் மேடையேற்றிய நடிகமணி வி.வி. வைரமுத்துவின் நாடகங்களை தனது ஆச்சியுடன் சென்று பார்த்து, தன் நாடக ஆர்வத்தை வளர்த்துக் கொண்டார். அந்நாட்களில் இளம்பெண்கள் நாடகங்களுக்குச் செல்வது மிகவும் அரிதாகவே இருந்தது. நாடகங்களைப் பார்த்து விட்டு வீட்டுக்கு வந்து அயலிலுள்ள சிறுவர்களை இருத்தி வைத்து எல்லாப் பாத்திரங்களையும் தானே நடித்துக் காட்டுவதாகக் குறிப்பிடும் வள்ளிநாயகி அவர்கள் அந்தச் சிறுவர்களையும் பாத்திரங்களில் சேர்த்து நடிக்கத் தொடங்கினார்.

பின்னர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்குத் தெரிவான குறமகள் அங்கு நாடகங்களுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டு பல நாடகங்களை மேடையேற்றினார். பிற்காலத்தில் பிரபல தொழிற்சங்கவாதியாகத் திகழ்ந்த அரியாலையைச் சேர்ந்த உதயணன் என்ற தோழர் தர்மலிங்கம் எழுதிய பல நாடகங்களில் இவர் நடித்திருந்தார். இவருடன் பத்மா சோமகாந்தன், அஞ்சுகம் கதிர்காமலிங்கம் போன்றோரும் நடித்திருந்தனர். உயரமும், தோற்றமும் உடையவராக வள்ளிநாயகி அவர்கள் விளங்கியதால் அவரே நாடகங்களில் கதாநாயகனாக ஆண் வேடங்களில் நடித்தது இங்கு குறிப்பிடத்தக்கது. கலாசாலையில் பிரதி வெள்ளிதோறும் இரவில் நடைபெறும் நாடகங்களுக்காக 'திரும்பிப் பார்' போன்ற திரைப்பட வசனப் புத்தகங்களை வாங்கிச் சுருக்கியும், திருத்தியும் மேடையேற்றினார்.

இந்தியா ஒரிசா மாநிலத்திலுள்ள சைலபால மகளிர் கல்லூரியில் B.A பட்டதாரியான குறமகள் யாழ். பல்கலைக்கழகத்தில் M.A பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். பண்டத்தரிப்பு மகளிர் வித்தியாலயம், இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியையாகக் கடமையாற்றினார். மகா



கவியின் புதியதொரு வீடு நாடகத்தை தாசீசியசின் உதவியுடன் சென். ஹென்றீஸ் மாணவர்களுக்குப் பயிற்றுவித்தார். மேலும் வள்ளிநாயகி அவர்கள் எழுதிய 'பணத்தின் நிழலில்', மாதவி மணிமேகலையை மையப் படுத்திய 'சித்ராபதி' போன்ற பல நாடகங்களை கல்லூரி மாணவர்களுக்காக எழுதி, நெறியாள்கை செய்து மேடை ஏற்றினார்.

பின்னர், அளுத்கம மகளிர் பயிற்சிக் கலாசாலையில் விரைவுரையாளராகப் பணிபுரிந்த அவர், அக்கலாசாலையிலேயே பதில் அதிபராகப் பதவி உயர்வும் பெற்றர். அங்கும் இவரது நாடகங்களுக்கு நல்ல வரவேற்பு இருந்தது. விமானப் பயணத்தின் போது பிறந்த ஒரு குழந்தை பற்றிய கதையை இவர் நாடகமாக மேடையேற்றிய போது அளுத்கம முஸ்லிம் மக்களின் எதிர்ப்புக்கு ஆளானார்.

வள்ளிநாயகி அவர்கள் இளவயதிலேயே ஒரு சிறந்த பேச்சாளராக விளங்கினார். குரும்பசிட்டி சன்மார்க்க சபையில் நடைபெறும் விழாக்களில் முக்கிய பேச்சாளராக விளங்கினார். தனது கணவர் இராமலிங்கம் தன்னை முதன் முதலாகப் பெண் பார்த்ததே இணுவில் சிவகாமி அம்மன் ஆலயத்தில், தான் சொற்பொழிவை நிகழ்த்திக் கொண்டிருக்கும் போது தான் என்று சிரித்தபடி குறிப்பிடும் இவருக்கு டாக்டர் சசிகலா செந்தில்லால், கலாவாணி பாலச்சந்திரன், மாவீரர் குகபாலிகா, துளசிராம் ஆகியோர் பிள்ளைகளாவர்.

எழுபதுகளில் கொழும்புப் பல்கலைக்கழகத்தினரால் நடாத்தப்பட்ட நாடக டிப்புளோமா கற்கை நெறியில் பங்கு கொண்ட பத்துத் தமிழரில் இவர் மட்டுமே பெண்ணாவார். எனினும் எவ்வித தயக்கமும் இன்றி விரிவுரையாளர்கள் கேட்டவுடன் முன்னே சென்று நடித்துக் காட்டும் துணிவு இவருக்கு இருந்ததாக கற்கையில் பங்கு கொண்ட ஏனையவர்கள் சொல்லிக் கேள்விப்பட்டுள்ளேன். இவருடன் குழந்தை சண்முகலிங்கம், கவிஞர் கந்தவனம், தாசீசியஸ், சுந்தரலிங்கம், காரை. செ. சுந்தரம்பிள்ளை, திருச்செந்தூரன் போன்றோர் நாடகக் கற்கை நெறியை மேற்கொண்டிருந்தனர். தமிழ், சிங்கள பேராசிரியர்கள் மட்டுமல்லாது ஜேர்மனி மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த நாடகர்களும் இவர்களுக்குப் பயிற்சி அளித்திருந்தனர்.

இந்தக் கற்கைநெறியில் நாடகருபமான நெறி, நாடக நெறி மற்றும் தனிநடிப்பு என்பன போதிக்கப்பட்டன. இக்கற்கையின் பயனாக மஹாகவியின் மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்ற கவிதைக்கான மேடை நிகழ்வு, கிறிஸ்தவ வேதாகமத்தில் வருகின்ற யூடித் என்ற கதையை மேடையில் உலவவிட்டது போன்றவற்றை இவர் நிகழ்த்திக் காட்டினார்.

கனடா வந்த பின்னர் தெற்காசிய மகளிர் மன்றத்திலும், லான்ஸ்டவுன் கூட்டுறவு இல்ல நிகழ்ச்சிகளிலும் சிறு சிறு நாடக மேடையேற்றங்களைச் செய்தார்.

எழுத்தும் கைவரப் பெற்ற வள்ளிநாயகி அவர்கள் சிறுவயதிலேயே வீரகேசரியில் பாலர் வட்டாரம் பகுதியிலும், தினகரனில் பாலர் கழகத்திலும் சிறு சிறு விடயங்களை எழுதத் தொடங்கினார். சீதனம் பற்றிய போலிக் கௌரவம் என்ற இவரது முதல் சிறுகதை வீரகேசரியில் வெளியானது. தொடர்ந்து பல சிறுகதைகளை குறமகள் என்ற புனைபெயரில் எழுதிய இவர் சனிக்கிழமைகளில் இரவு ஒன்பது மணிக்கு இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகும் நாடகங்கள் பலவற்றையும் எழுதியுள்ளார்.

இவரது குறமகள் கதைகள், உள்ளக் கமலமடி என்ற சிறுகதைத் தொகுப்பு, மாலை சூடும் நாள், மகளின் நினைவாக எழுதிய ஈழத்து ரோசா, கணவரின் நினைவாக யாத்த ராமபாணம் ஆகிய கவிதை நூல்களும் மற்றும் குறுமோகன் பாலர் பாடல்கள், சக்தி நெறி போன்ற பல தொகுப்புகளும் இதுவரை நூல்களாக வெளிவந்துள்ளன. மிதுனம் என்ற இவரது முதல் நாவல் தற்போது அச்சில் உள்ளது.

தன் முதுமையையும், உடலையும் பொருட்படுத்தாது தமிழ்ப் பேச்சையும், எழுத்தையும் மூச்சாகக்கி இயங்கி வரும் குறமகள் மென்மேலும் இலக்கியப் பணி செய்ய தாய்வீடு வாழ்த்துகிறது.



sriskandan@thaiveedu.com

**உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி நீங்களும் எழுத வேண்டுமா?**

**கலைஞர்கள் பற்றிய விபரங்கள், அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டுக்கு அனுப்பிவையுங்கள்.**

**Thaiveedu**
**Woodside Square, P.O.Box #63581**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**